MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# கோவலன் கண்ணகி திருமணம்

பேரா. மு.பூங்கோதை,
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.
DOI 10.5281/zenodo.17111979.

**Abstract :**

Marriage is an important part of everyone's life. After a certain age, marriage is a turning point that changes the course of human life. Greater care is needed in choosing a partner who can be a union of two minds, a noble relationship that will accompany you until the end, and a hope that will accompany you throughout your life. In the Sangam period, the marriage of the leader and the leader takes place only after the marriage of the leader. In contrast to that, in the Kapiya period, only the Silappathikaram records the marriage with the consent of the parents. The proof of this is the marriage of Kovalan - Kannagi. This article aims to examine this.

**Key Words :** Silambu - Kovalan - Kannagi - Kappiyam

## முன்னுரை

திருமணம் ஒவ்வொருவரின் வாழ்விலும் முக்கிய அங்கமாக இருக்கின்றது . குறிப்பிட்ட வயதிற்கு பின்பு மனித வாழ்க்கையை தடம் மாற்றுகின்ற ஒரு திருப்பு முனையாக திருமணம் திகழ்கின்றது. இரு மனங்களின் இணைவாகவும் , இறுதி வரை உடன் வருகின்ற உன்னத உறவாகவும், ஆயுள் முழுவதும் துணை வருகின்ற நம்பிக்கையாகவும் திகழக்கூடிய துணையை தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் தேவை . சங்க காலத்தில் தலைவன் தலைவியின் களவு வாழக்கைக்கு பின்னரே கற்பு வாழக்கையானது நிகழ்கின்றது . அதிலிருந்து மாறுபட்டு காப்பிய காலத்தில் சிலப்பதிகாரமே பெற்றோர் சம்மதத்துடன் கூடிய திருமணமுறையை பதிவு செய்கின்றது . அதற்கு சான்று கோவலன் - கண்ணகி திருமணம். இதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## திருமணம் நிகழும் இடம்

கோவலன் கண்ணகி திருமணம் புகார் நகரில் ந டைபெறுகின்றது என்பதை இளங்கோவடிகள் முதலில் சுட்டுகின்றார் . குடிபெயர்தல் என்பதை அறியாத மக்கள் , அறிவுடைய பெரியோர் , நெடிய சொர்க்கத்திற்கும், நாகர் உலகத்திற்கும் நீண்ட புகழும் இன்பமும் பொருந்திய புகார் நகரத்தில் கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்றது என்று திருமணம் நிகழும் இடத்தினை இளங்கோவடிகள் காட்டுவதை,

> **“நாகநீள் நகரொடு நாகநாடு அதனொடு**
> **போனம்நீள் புகழ்மன்னும் புகார்நகர் அதுதன்னில்”**

என்ற வரிகளின் வாயிலாக அறியமுடிகின்றது . தற்காலத் திருமணத்தில் முக்கியமானது திருமணம் நடைபெறக்கூடிய இடமாகும் . பத்திரிக்கை கொடுத்து உற்றாரை அழை க்கும் போது திருமணம் நிகழக்கூடிய இடத்தினைத் சுட்டுவதை இன்றும் வழக்கில் உள்ளதை அறியலாம்.

## மணமக்கள் அறிமுகம்

### அருங்குணக் கண்ணகி

மழை போல் வாரி வழங்கக்கூடிய வள்ளல் தன்மை பொருந்திய மாநாய்கன் மகள் கண்ணகி . அவள் செந்தாமரை மலரில் வீற்றிருக்கக் கூடிய திருமகளைப் போன்ற வள். குற்றமற்ற கற்பினை


http://Creativecommons.org//license/by/4.0/.

உடையவள். பன்னிரெண்டு வயதினை உடையவள் . பெண்கள் அனைவரும் கண்ணகியை தொழுது வணங்குவார்கள் என்று மணமகளை இளங்கோவடிகள் அறிமுகம் செய்வதை,

**“மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்**
**ஈகைவான் கொடியன்னாள் ஈராறுஆண்டு அகவையாள்**
**அவளுந்தான்**
**போதில்ஆர் திருவினாள் புகழுடை வடிவென்றும்**
**தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்என்றும்**
**மாதரார் தொழுதுஏத்த வயங்கிய பெருங்குணத்துக்**
**காதலாள் பெயர்மன்னும் கண்ணகிஎன் பாள்மன்னோ”**

என்ற அடிகளில் மணமகளான கண்ணகியின் பெற்றோர் , கண்ணகியின் அழகு , கற்பு, குணம் ஆகியவற்றை அறிந்துகொள்ள முடிகின்றது.

**அழகிய கோவலன்**

உலகாளும் அரசர்க்கு இணை என்று சொல்லக்கூடிய அளவில் செல்வக்குடியில் பிறந்தவன் . சேர்க்கின்ற செல்வத்தினை பிறருக்கு அளித்து மகிழக்கூடிய மாசாத்துவானின் மகன் கோவலன் . பதினாறு வயதுடையவன். உலகம் சிறிதாகும் படி உயர்ந்த புகழினை உடையவன் கோவலன். இசை போன்ற இனிய மொழி பேசக்கூடிய அவனை பெண்கள் அனைவரும் முருகன் போன்ற அழகினை உடையவன் என்று இவன் மீது காதலோடு புகழ்ந்து பேசுவர் என்று மணமகனான கோவலனை இளங்கோவடிகள் அறிமுகம் செய்வதை,

**“பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த**
**ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்**
**வருநிதி பிறர்க்குஆர்த்தும் மாசாத்து வான்என்பான்**
**இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டுஆண்டு அகவையான்**
**அவனுந்தான்,**
**மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்**
**பண்தேய்த்த மொழியினார் ஆய்த்துப் பாராட்டிக்**
**கண்டுஏத்தும் செவ்வேள்என்று இசைபோக்கிக் காதலால்**
**கொண்டுஏத்தும் கிழமையான் கோவலன்என் பான் மன்னோ”**

என்ற வரிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது . தற்காலத் திருமணப் பத்திரிக்கைகளில் மணமக்களின் பெற்றோர் பெயர் , மணமகளின் பெயர், மணமகனின் பெயர் ஆகியவற்றை அச்சிடும் முறை வழக்கில் இருப்பது அனைவரும் அறிந்ததாகும் . ஆண் வீட்டார் பத்திரிக்கைகளில் முதலில் மணமகனின் விவரங்கள் இடம்பெற்றிருக்கும் பெண் வீட்டார் பத்திரிக்கைகளில் முதலில் மணமகளின் விவரங்கள் இடம்பெற்றிருக்கும் . இம்முறையை சிலப்பதிகாரத்தோடு ஒப்பிட்டு பார்க்கையில் கண்ணகியின் தன்மைகளே முதலில் சொல்லப்பட்டு இருக்கின்றது.

**பெற்றோர் நிச்சியத்த திருமணம்**

கோவலன் கண்ணகி திருமணம் பெற்றோரின் விருப்பப்படி நிச்சயிக்கப்பட்ட திருமணம் . நல்ல நாளினை தேர்ந்தெடுத்து அணிகள் அணிந்த மகளிரை யானை மீது அமரச்செய்து திருமணச் செய்தியினை நகர மக்களுக்கு அறிவித்த செய்தியினை,

**“இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்**


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

**மணஅணி காண மகிழ்ந்தனர்;: மகிழ்ந்துழி**
**யானை எருத்தத்து அணியிழையார் மேல்இரீஇ,**
**மாநகர்க்கு ஈந்தார் மணம்**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது . தற்காலத் திருமண முறைகளிலும் ஊரார்க்கு திருமணத்தை அறிவிக்கும் முறை வழக்கில் இருப்பதை அறியலாம்.

**மங்கல வாத்தியங்களும், மங்கல நாணும்**

திருமணம் நிகழும் போது மங்கல வாத்தியங்கள் ஒலிப்பது காலங்காலமாக வழக்;கில் இருந்து வருகின்றது. கோவலன் கண்ணகி திருமணத்தின் போது முரசுகள் ஒலிக்க , மத்தளங்கள் அதிர , சங்குகள் முழங்க அரசன் உலா வருவது போல் வெண்குடைகுள் மங்கல நாண் ஊரை வலம் வரும் காட்சியை,

**“முரசியம்பின, முருடு அதிர்ந்தன, முறைஎழுந்தன பணிலம் வெண்குடை**
**அரசெழுந்ததொர் படியெழுந்தன, அகலுள்மங்கல அணிஎழுந்தது.**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது . மங்கல வாத்தியங்கள் ஒலித்தல், மங்கல நாண் ஆகிய முறைகள் தற்காலத்திலும் வழக்கில் இருந்து வருகின்றது.

**திருமண மண்டபம்**

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடைபெற்ற மண்டபமானது மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வயிரங்கள், மணிகள் போன்றவை கொண்டு அலங்கரிக்கப்பட்ட தூண்களைக் கொண்டிருந்தது . அதில் நீல நிறப் பட்டினால் விதானம் அமைக்கப்பட்டு முத்துக்கள் பொருத்தி பந்தல் அமைக்கப்பட்டிருந்தது என்பதை,

**“மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து**
**நீல விதானத்து நித்திலம்பூம் பந்தர்க்கீழ்”**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது . தற்காலத் திருமண முறைகளில் திருமணம் நிகழக்கூடிய மண்டபமும் , அதனை அலங்கரிக் கும் முறைகளும் முக்கிய அங்கமாக திகழ்கின்றது.

**மணமகன் - மணமகள் கைப்பற்றல்**

வானத்தில் திகழ்கின்ற சந்திரனுக்கும் , ரோகிணி நட்சத்திரத்திற்கும் உள்ள உறவு கணவன் மனைவிக்கு உள்ள உறவு போன்றது என்று கதைகள் கற்பிக்கப்பட்டு இருக்கின்றது . ஆதலால் ரோகினியைச் சந்திரன் சேரக் கூடிய நல்ல நாளிலே கோவலன் கண்ணகி திருமணம் முதிய பார்ப்பான் மறைகள் ஓத , அருந்ததி போன்ற கற்பினை உடைய கண்ணகிக்கும் , கோவலனுக்கும் திருமணம் நிகழ்கின்றது . திருமணம் நிகழ்ந்த பின் கோவலன் கண்ணகி இருவரும் தீயை வலம் வருகின்ற காட்சியை,

**“வானூர் மதியம் சகடு அணைய, வானத்துச்**
**சாலி ஒருமீன் தகையாளைக், கோவலன்**
**மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
**தீவலம் செய்வது காண்பார்கள் நோன்புஎன்னை?**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. அந்தணர் வேதம் சொல்ல, தீயினை வலம் வந்து திருமணம் செய்கின்ற முறை தற்பொழும் நடைமுறையில் இருப்பதை அறியலாம்.

**மணமக்களை வாழ்த்துதல்**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

மங்கையர் பலர் ஒன்று சேர்ந்து நின்று உதட்டில் புன்முறுவல் தாங்கியவராய் “காதலர்களாகிய நீங்கள் என்றும் பிரியாமலும் , இன்று பிணைந்துள்ள இக் கைகளின் இணைப்பு என்றும் நெகிழாமலும் , என்றும் தீமை இல்லாமலும் வாழ்வீராக ” என்று மலர்களைத் தூவி வாழ்த்தினர் என்பதை,

**“காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்**
**தீதுஅறுக எனஏத்திச், சின்மலர் கொடுதூவி**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது . தற்கால முறைகளிலும் மங்கல சுமங்கலிப் பெண்கள் மலர் தூவி மணமக்களை வாழ்த்தும் முறை நடைமுறையில் இருக்கின்றது.

**முடிவுரை**

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைக்கும் போது பிற்கால வாழ்வைக் கருத்தில் கொண்டே பலசடங்குகளை பின்பற்றி திருமணத்தை நிகழ்த்துகின் றனர். தம்பதிகள் பிரியாமல் இன்பமாக வாழ்வார்கள் என்ற நம்பிக்கையில் வேத முறைப்படி புரோகிதர் மறை சொல்ல திருமணத்தை நிகழ்த்தி வைக்கின்றனர் . அம்முறைப்படியே கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்றது. அம்முறைகள் இன்றும் பல வழக்கத்தில் இருந்து வருகின்றது.



http://Creativecommons.org//license/by/4.0/.